தினமணி கோவை
வியாழக்கிழமை, 13 நவம்பர், 2014

# டுஸீன் தசை சிதைவு நோய்க்கு இலவச மாதிரி மறுவாழ்வு மையம்



கோவை, நவ.12: கோவையில் டுஸீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இலவச மாதிரி மறுவாழ்வு மையம் தொடங்கப்படவுள்ளதாக, மரபணு பரிசோதனை ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பி.ஆர்.லட்சுமி (படம்) தெரிவித்தார்.

இதுகுறித்து, புதன்கிழமை அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழக அரசின் நிதியுதவியுடன் மரபணு பரிசோதனை ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் குறிஞ்சி மருத்துவமனை வளாகத்தில் நவம்பர் 15-ஆம் தேதி, டுஸீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மாதிரி மறுவாழ்வு மையம் தொடங்கப்படவுள்ளது.

டுஸீன் தசை சிதைவு நோய் என்பது வம்சா வழியாக குழந்தைகளைத் தாக்கும் நோயாகும். உலகளவில் 3,500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தையை மட்டும் இந் நோய் பாதிக்கிறது. இந் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் செயல்திறன் படிப்படியாக குறையும்.

இந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் குழந்தைப் பருவத்திலேயே நடக்கும் திறனை இழந்து விடுவார்கள். இளம்பருவத்தில் கைகளின் செயல்திறனும் இழக்கத் தொடங்கும். மேலும், வளர்ச்சி முழுமை அடைவதற்குள் சுவாசிக்கும் திறனையும் இழக்க நேரிடும்.

எனவே தசை சிதைவு நோயின் தாக்கத்தைக் குறைப்பதுடன், தசை வலுவிழந்து போகாமல் தடுக்க உரிய உடலியக்கப் பயிற்சி முக்கியம். இதற்கான பயிற்சியை தினமும் மேற்கொள்வதன் மூலம் நோயின் தாக்கத்தைக் குறைக்க முடியும். கோவை மாவட்டத்தில் மட்டும் 163 குழந்தைகள் டுஸீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இக் குழந்தைகளுக்கு போதிய சிகிச்சை, பயிற்சி அளிக்கப்படவில்லை என்றால் அவர்களது உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடையும்.

உரிய நேரத்தில் மருத்துவ பரிசோதனை, சிகிச்சை, உடலியக்கப் பயிற்சி மற்றும் யோகா பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டியது அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உதவியுடன் மறுவாழ்வு மையம் தொடங்கப்படவுள்ளது என்றார்.